**இலங்கை சேமிப்பு வங்கி - 2019**
**---------------------------------------**

## 1.1 அபிப்பிராயம்
**-----------------**

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் ("வங்கி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

வங்கியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை
**---------------------------------------------**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்
**------------------------------------------------------------------------------------------------------------**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 10,523,919 பெறுமதியான தொங்கல் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகையானது ஏனைய செலுத்த வேண்டிய மீதியின் கீழ் 2019 டிசெம்பர் 31 இல் காட்டப்பட்டுள்ளது. மேலும், ரூபா 92,577 பெறுமதியான நேர் மறை மீதியானது கடன் தொங்கல் கணக்கிலும் ரூபா 113,839 கடன்பட்டோர் தொங்கல் கணக்கிலும் சில்லறை கடன்படடோர் கணக்கின்கீழ் ஆண்டிறுதியில் காட்டப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறோம். இவை அனைத்தும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும். இந்த சயின்ட சிஸ்ட த்துடன் (Scienter system) இணக்கத்தை மேற்கொள்ள ஒரு விரிவான பயிற்சி பட்டரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பாளும் சமரசம் செய்யப்படாத | தொங்கல் கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உருப்படிகளை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. (முகாமைக் குழு முடிவின் படி சமரசம் செய்யப்படாத கணக்கு மீதிகளை அடையாளம் காணவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.) | |

### 1.5.2 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 டிசெம்பர் 31 இல் பொது பேரேட்டு குத்தகை, தவணை முறைக்கொள்வனவு மற்றும் ஏனைய கடன் நிலுவைகள் எப்லிகேஷன் சிஸ்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 5,438,669 வேறுபட்டது. | ஏற்றுக்கொள்கிறோம். இவை அனைத்தும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும். இந்த சயின்ட சிஸ்ட த்துடன் (Scienter system) இணைக்கத்தை மேற்கொள்ள ஒரு விரிவான பயிற்சி பட்டரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பாளும் சமரசம் செய்யப்படாத உருப்படிகளை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. (முகாமைக் குழு முடிவின் படி சமரசம் செய்யப்படாத கணக்கு மீதிகளை அடையாளம் காணவும் அறிக்கை சமர்ப்பிக்கவும சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.) | மீதிகளை இணக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்க |
| (ஆ) வங்கியின் அமைப்பானது (Bank's system) மீண்டும் பட்டியலிடும் கடன்களை ஒரு பதிவின் மூலம் மேம்படுத்த (Update) ஆதரவற்றதாக உள்ளது. மேலும் பட்டியலிடப்பட்ட கடன் தொடர்பாக வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட பணமானது அவர்களின் கடன் நிலுவைக்கு எதிராக அமைப்பின் மூலம் பதிவினை மேற்கொள்ள முடியாதுள்ளது. இருப்பினும் இவ்வகையான கடன்களின் | தற்போதைய முறிவு மேலதிக கொடுப்பணவு கணக்கு நிலுவை ரூபா 1,811,237.13. கணனி அமைப்புக்குட்பட்ட நிலுவைக்கும் கையேட்டு நிலுவைக்குமிடையிலான சிக்கலை சரிசெய்வதற்காக நிர்வாககக் கடன் குழு (ECC) 12.08.2020 இல் மீள் செலுத்தப்பட்ட தொகையை கணனி அமைப்பில் பதிவு செய்ய அனுமதித்தது. இருப்பினும் கிளைகளின் மூலமானக PO க்கு எதிராக | கணனி அமைப்பானது சரியான தேவைக்கு அமைய குறிப்பிட்ட திருத்தங்களை மேற்கொள்ள கூடியதாக செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மூலம் பெறப்படும் பணத்தை பதிவுசெய்ய வங்கி "முறிவு மேலதிக கொடுப்பனவு - எப்.எம்'' எனும் பேரேட்டுக் கணக்கொண்றை பராமரிக்கின்றது. டிசெம்பர் 31 இல் இக் கணக்கின் நிலுவை ரூபா.3,439,409 ஆகும். இத்தொகை நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய கடன் தொகையிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக ஏனைய பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதனால் சிறிய மற்றும் நடுத்தர நிறுவன உரிமையாளர்களையும் கூட்டுறவு அமைப்புக்களையும் தவிர்த்திருந்தது. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பெற வேண்டிய நான்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,275,142 தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு மேவல் மாறாதுள்ள கணக்குகளாவன பிற்திகதியிடப்பட்ட காசோலை தள்ளுபடி, முற்பண வாடகை கொள்முதல், குத்தகை தொங்கல் மற்றும் சில்லறை கடன்பட்டோர். | ஏற்றுக்கொள்கிறோம். இவை அனைத்தும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும். இந்த சயின்ட சிஸ்ட த்துடன் (Scienter system) இணக்கத்தை மேற்கொள்ள ஒரு விரிவான பயிற்சி பட்டரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பாளும் சமரசம் செய்யப்படாத உருப்படிகளை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. (முகாமைக் குழு முடிவின் படி சமரசம் செய்யப்படாத கணக்கு மீதிகளை அடையாளம் காணவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.) | வங்கி கண்டிப்பாக குறிப்பிடப்பட்ட நிலுவையை இணக்கம் செய்ய அல்லது தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ஏழு கட்டுப்பாட்டு கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,228,836 தீர்க்கப்படாது மதிப்பாய்வு ஆண்டு இறுதியில் காணப்பட்டது. இது கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பானது. | ஏற்றுக்கொள்கிறோம். இவை அனைத்தும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும். இந்த சயின்ட சிஸ்ட த்துடன் (Scienter system) இணக்கத்தை மேற்கொள்ள | வங்கி கண்டிப்பாக குறிப்பிடப்பட்ட நிலுவையை இணக்கம் செய்ய அல்லது தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒரு விரிவான பயிற்சி பட்டரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பாளும் சமரசம் செய்யப்படாத உருப்படிகளை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. (முகாமைக் குழு முடிவின் படி சமரசம் செய்யப்படாத கணக்கு மீதிகளை அடையாளம் காணவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.) | |
| (iii) PSDB வாடிக்கையாளர்களின் பணச்சந்தை முறிக்கான முதிர்ச்சியில் செலுத்தும் தள்ளுபடி கொடுப்பணவானது முன்கூட்டியே செலுத்தப்பட்ட தள்ளுபடி கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடானது குறிப்பிட்ட மீதியை விட அதிகமாக இருந்தது.<br><br>ரூபா<br>முன்கூட்டியே செலுத்தப்பட்ட தள்ளுபடி தொகை 13,534,878<br>ஏற்பாடு 18,006,622<br>மேலதிக ஏற்பாடு 4,471,744 | ஏற்றுக்கொள்கின்றோம் மற்றும் இது 2020 இல் சரி செய்யப்படும். | வங்கி கண்டிப்பாக குறிப்பிடப்பட்ட நிலுவையை இணக்கம் செய்ய அல்லது தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 கொடுக்க வேண்டியவைகள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| செலவு மீதிகள் ரூபா 1,975,871 மற்றும் ரூபா 1,428,707 என்பன முறையே பிழை திருத்தும் சேமிப்பு கணக்கு மற்றும் பிழைத் திருத்தும் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் 2019 டிசெம்பர் 31 இல் காட்டப்பட்டது. மேற்குறிப்பிட்ட மீதியை இணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறோம்.<br>இவை அனைத்தும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும். இந்த சயின்ட சிஸ்ட த்துடன் (Scienter system) இணக்கத்தை மேற்கொள்ள ஒரு விரிவான பயிற்சி பட்டரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பாளும் சமரசம் செய்யப்படாத உருப்படிகளை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. (முகாமைக் குழு முடிவின் படி சமரசம் செய்யப்படாத கணக்கு மீதிகளை அடையாளம் காணவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.) | குறிப்பிடப்பட்ட நிலுவையை இணக்கம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.3 கடன் மற்றும் முற்பணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ரூபா 99,992,620 பெறுமதியான கடன் நிலுவைத் தொகையானது ஆறு சமூக அடிப்படையிலான நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியது இது 2015 இல் இருந்து அறவிடப்படவில்லை. இவ் வாடிக்கையாளர்களினால் கடனுக்கெதிராக எவ்வித பாதுகாப்பும் வழங்கப்பட வில்லை எனவே இக் கடன் நிலுவையை மீட்பதென்பது சந்தேகத்திற்குரியது. | NDTF கம்பனியானது SLS வங்கியுடன் ஒன்றினைவதற்கு முன்னர் கம்பனியின் கொள்கைக்கமைய எவ்வித பாதுகாப்பினையும் பெற்றுக் கொள்ளாது திருக்கோணமலை மாவட்ட காந்தி சேவை சங்கம், ஐ-குரேஸ் சமூக அபிவிருத்தி, ஸ்ரீ ரேஹன இறப்பு இழப்பீடு மற்றும் கிழக்கின் ஒளிச்சுடர் சமூக சேவை நிறுவனம் என்பவற்றுக்கு கடனுதவி வழங்கியிருந்தது. இருப்பினும் SLS வங்கியின் மீட்பு பிரிவினால் இக் கடன்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேட்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், NDTF கம்பனியானது SLS வங்கியுடன் ஒன்றினைவதற்கு முன்னர் கம்பனியின் கொள்கைக்கமைய எவ்வித பாதுகாப்பினையும் பெற்றுக் கொள்ளாது வரையறுக்கப்பட்ட ஹோப் மைக்ரோ பைனான்ஸ் சேவை (கரன்டீ) மற்றும் பீப்பல்ஸ் இகனமிக் டிவலப்மன்ட் (PEEDO) என்பவற்றுக்கு கடனுதவி வழங்கியிருந்தது. ஒன்றினைந்ததன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஹோப் மைக்ரோ பைனான்ஸ் சேவை (கரன்டீ) மற்றும் பீப்பல்ஸ் இகனமிக் டிவலப்மன்ட் (PEEDO) என் ஈ- பைனான்சயல் சிஸ்டத்தில் ' முறையே | கடன் நிலுவைத் தொகையை உறிய நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 09.02.2013 மற்றும் 04.10.2013 ஆகிய திகதிகளில் நுளைக்கப்பட்டன. ஒன்றினைந்ததன் பின்னர் ஹோப் மற்றும் PEEDO என்பவற்றிலிருந்து முறையே ரூபா.892,541.03 மற்றும் ரூபா.8,353,139.03 SLS வங்கியின் கொள்கைக்கிணங்க அறவிடப்பட்டது. இருப்பினும் SLS வங்கியின் மீட்பு பிரிவினால் இவ்விரு கடன்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேட்கொள்ளப்பட்டுள்ளன. | |
| (ii) முழு கடன் நிலுவைத் தொகையில் ரூபா 53,049,906 வானது "நபர்கள் ஆதனம், தொழிற்துறை அதிகாரசபைகளின் புனரமைப்பு (Reppia)" கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. இதில் 2019 டிசெம்பர் 31 இல் ரூபா 48,893,664 அல்லது 92 சதவீதம் செயலற்ற கடனாக காணப்பட்டது. | கவனத்தில் எடுக்கப்பட்டது. | "Reppia" வகை செயலற்ற கடன் நிலுவையை தீர்ப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

## 1.7 வரி பிரமாணங்களுக்கு இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **வரி வருமானம்**<br>2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி சொத்து பயன்பாட்டு உரிமைக்கான செலுத்திய வாடகை சரி செய்யப்படவில்லை மற்றும் ரூபா 1,886,442 உரிமைக் கோரலுக்கு மேல் இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். மற்றும் இது வருடாந்த திருப்பிச் செலுத்துதல் மூலம் Y/A 2019/2020 இல் சரிசெய்யப்படும். | உள்நாட்டு வருவாய் சட்டத்தை வங்கி கடைப்பிடிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.447,816,707 தொகை இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 351,266,136 தொகை ஆனதால் நிதி விளைவுகளில் ரூபா 96,550,571 பெறுமதியான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இது ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஏனைய செலவுகளில் ஏற்பட்ட குறைவுமே இந்த முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவான விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக செய்யப்பட்ட பகுப்பாய்வின் போது பின்வரும் முக்கிய மாற்றங்கள் இனங்காணப்பட்டது.

| விபரம் | மாற்றம் அதிகரிப்பு / (குறைவு) (ரூபா. மில்லியன்) | மாற்றம் % | மாற்றத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 117,031,750 | 619% | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செலுத்த வேண்டிய வரி அபராத ஏற்பாட்டை ரத்துச் செய்தமையே வரி அபராதமானது பதிவழிக்கப்பட்டதற்கு காரணமாகும். |
| தனிப்பட்ட செலவினங்கள் | (11,870,635) | 7% | முன்மொழியப்பட்ட கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய சம்பளம் மற்றும் பேனஸ் கொடுப்பனவுகளின் மேலதிக ஏற்பாட்டை மாற்றியமைத்தல். |
| ஏனைய செலவினங்கள் | (64,942,043) | 46% | சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் ஏனைய செலவுகள் ரூபா 65 மில்லியன் அல்லது 46 சதவீதம் குறைவடைந்தமைக்கு காரணம் வரி அபராத ஏற்பாடு செய்யப்பட்டமை மற்றும் நிலையான சொத்து விற்பனை நட்டம் ஏற்பட்டமையாகும். |
| வரி வருமானம் | 49,307,264 | 36% | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிச் சேவைகளின் வரிக்குப் பின் இலாபம் 29 சதவீதம் குறைவடைந்தது. |
| கடன் திருப்பிச் செலுத்தல் | 45,704,385 | 342% | DRL லேவியானது 2019 முழு வருடத்திற்கும் அறவிடப்பட்டிருந்தது. மற்றும் இது 2018 இல் 4 ஆம் காலாண்டுக்கு மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. DRL விதியானது 2018 ஆம் காலாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி வங்கியின் சில முக்கியமான விகிதங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு முன்னைய ஆண்டு மற்றும் துறைசார் விகிதங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

| விபரம் | வங்கி | | துறை விகிதம் |
|---|---|---|---|
| | 2019 | 2018 | 2019 |
| **இலாப விகிதங்கள்** | | | |
| சராசரி உரிமை மூலதன திரும்பல் (ROE) (சதவீதம்) | 8.68 | 6.52 | 6.8 |
| சராசரி சொத்து திரும்பல் (ROA) (சதவீதம்) | 7.09 | 5.22 | 0.8 |
| தேறிய வட்டி வரம்பு (சதவீதம்) | 11.48 | 11 | 3.4 |
| **போதுமான மூலதன விகிதம்** | | | |
| போதுமான மூலதன விகிதம் -Tire 1 (குறைந்த பட்சம் 5%) | 83 | 90* | 12.3 |
| **சொத்தின் தரம்** | | | |
| மொத்த செயல்படாத முற்பணம் (PSDB உள்ளடங்கலாக) | 41.44 | 36 | 5.5 |
| மொத்த செயல்படாத முற்பணம் (PSDB நீங்கலாக) | 14.48 | 11 | 3.9 |
| **திரவ விகிதம்** | | | |
| திரவ பாதுகாப்பு விகிதம் (சதவீதம்) | 514 | 110* | 53.1 |

* போதுமான மூலதன விகிதம் (Tier II) மற்றும் திரவ விகிதம் என்பன வங்கியினால் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட விபரங்களிலிருந்து எடுக்கப்பட்டன. PSDB என்பது பிரமுக சேவிங் என்ட் டிவல்ப்மன்ட் பேங்க் ஆகும்.

(i) 2019 டிசெம்பர் 31 இல் உரிமை மூலதன திரும்பல் (ROE) மற்றும் சொத்து திரும்பல் (ROA) என்பன முறையே 8.68 சதவீதம் மற்றும் 7.09 சதவீதம் அதிகரித்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முக்கியமாக 2019 ஆம் ஆண்டில் இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும்.

(ii) 2019 ஆம் ஆண்டில் உயர்ந்த நிகர வட்டி வரம்பு 11.48 சதவீதம் அவதானிக்கப்பட்டது. இது உரிமம் பெற்ற சிறப்பு வங்கி விகிதமான 3.4 சதவீதத்திலும் பார்க்க அதி உயர்வாக காணப்படுகின்றது.

(iii) 2019 டிசெம்பர் 31 இல் வங்கியின் போதுமான மொத்த மூலதன விகிதம் 83 சதவீதமாக இருந்ததுடன் இது குறைந்த பட்ச சட்டரீதியான தேவைப்பாடன 12.5 சதவீதத்தை விட மிக அதிகம்.

(iv) 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த செயலற்ற முற்பண விகிதம் PSDB நீங்கலாக 14.48 சதவீதம் இது துறைசார் விகிதமான 3.9 சதவிகிதத்திலும் மிகக் கூடியது. இது செயலற்ற கடன் RAPPIA கடன்கள் (தனிநபர் புனர்வாழ்வு, சொத்து, தொழில்துறை அதிகரி - 90%) மற்றும் தனிநபர் மற்றும் பொது நிறுவன கடன் (25%) என்பவற்றின் அதிகரிப்பினால் ஏற்பட்ட தாக்கமாகும். மேலும் 2019 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த செயலற்ற முற்பண விகிதம் PSDB உள்ளடங்கலாக 41.44%

(v) துறை சார் விகிதமான 53% விட வங்கியின் திரவ விகிதம் உயர்வான மட்டத்தில் (514%) காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(i) வங்கியின் செயல்திறன்**<br><br>வங்கியின் முக்கிய குறிக்கோலானது அதன் சங்க நிபந்தனைகளை அடையாளம் காணல். அபிவிருத்தி, வளர்ச்சி, வினையூக்கப்படுத்தல், மற்றும் நிலையான வருமானத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள உதவுதல், மற்றும் ஏழைகளுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நிதி உதவி மற்றும் சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தி சுய வேலைவாய்ப்பு உட்பட சிறு நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற வேலைகள் போன்ற நடவடிக்கைகள் அடங்கும். இருப்பினும் வங்கி அதன் முக்கிய குறிக்கோளினை கருத்திற் கொள்ளாது வங்கி அதன் முதலீட்டின் 72 சதவீத்தை நிலையான வைப்பு, நிதிக் கருவிகள், உரிமை மூலதன கருவிகள் போன்றவற்றில் மீளாய்வாண்டு இருதியில் முதலிட்டிருந்தது. | வங்கியின் நடவடிக்கைகள் அனைத்தும் 4 கிளைகளினால் மட்டுமே மேற் கொள்ளப்படுகின்றன. அத்துடன் புதிய கிளைகளை ஆரம்பிக்கவும் பணியார்களை நியமிக்கவும் மற்றும் மூலதன செலவினங்கள் போன்றவற்றை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. இருப்பினும் வங்கி நடவடிக்கைகள் 4 கிளைகளிலும் மேற்கொள்ளப்படுவதுடன் மிகை (surplus) ஆனது குறுகிய மற்றும் நீண்டகால முதலீடுகளில் முதலீடு செய்யப்படுகின்றன. | வங்கியின் முக்கிய நோக்கத்தில் இன்னும் கவனம் செலுத்தப்படுவதை உறுதி செய்யுங்கள். |
| **(ii) கூட்டினைக்கப்பட்ட நேரத்தில் வங்கியின் ஆரம்ப நோக்கங்கள்**<br><br>2010 மே 24 ஆம் திகதி நினைவுப்பத்திர (Memorandom) அமைச்சரவை குறிப்பு இலக்கம் PED/NDTF இன் 1.3 ஆம் | இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை | வங்கியானது PSDB வைப்புக்களை |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் படி, வங்கியானது 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதன் காரணம் பிரமுக சேவிங் என்ட டிவளப்மன்ட் வங்கி (PSDB) இல் பாதிக்கப்பட்ட வைப்புதாரர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்படுவதாகும். ஆதலால் 2019 டிசெம்பர் 31 இல் PSDB யின் பொறுப்பு மீதி மற்றும் 2018 மீதி முறையே ரூபா 651,396,194 மற்றும் ரூபா 656,486,357 இந்த நிலுவைகளை வங்கி தீர்ப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் திட்டமொன்று அறிமுகப்படுத்தா்ட்டு அதனை 2009 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 9,155,700 அல்லது 1.4 சதவீதம் மற்றும் ரூபா 541,174,926 அல்லது 47 சதவீதம் PSDB யின் பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டன. | சபையினால் (Monitory Board) அனுமதிக்கப்பட்ட 10 வருட வைப்பு மீளச் செலுத்தும் திட்டத்தினை வங்கி கடைப்பிடிக்கின்றது. வங்கி வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளை நிலுவை இல்லாமல் முழுமையாக செலுத்தியது. | செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| **(iii)** | **செயலற்ற PSDB கடன்களை அறவீடு செய்தல்**<br>2018 டிசெம்பர் 31 இல் செயலற்ற PSDB கடன் நிலுவை ரூபா 1,020,102,438 இதில் ரூபா 6,665,501 அல்லது 0.65 சதவீதமே நடப்பாண்டில் வங்கியால் அறவிடப்பட்டுள்ளது. இதற்கமைய 2019 டிசெம்பர் 31 இல் வங்கியில் ரூபா 1,013,436,937 மேலும் மீட்டகப்பட வேண்டியுள்ளது. | கவனத்திற் கொள்ளப்பட்டது. மற்றும் 2008 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் PSDB யிடமிருந்து மீட்டகப்பட்ட தொகை ரூபா 1,129.97 மில்லியன். | வங்கியானது PSDB கடன்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| **(iv)** | **வங்கியின் சொத்துக்கள் அடிப்படையான பகுப்பாய்வு**<br>2015 ஆண்டின் வங்கியின் சொத்துக்கள் அடிப்படையான பகுப்பாய்வின் படி பெறுமதி ரூபா 9,175 மில்லியன் மற்றும் இது ரூபா 8,717 மில்லியனாக 2019 ஆம் வருட இறுதியில் குறைவடைந்தது. இது 5 சதவிகித குறைவை பிரதிபளிக்கின்றது. மொத்த சொத்து அடிப்படையில் உரிமம் பெற்ற சிறப்பு வங்கியின் (LSBS) இக் காலத்திற்குரிய சொத்து 43 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கமைய மொத்த சொத்து அடிப்படையில் வங்கியின் வளர்ச்சி விகிதமானது LSBS யின் வளர்ச்சி விகிதத்தை விட சம்பந்தப்பட்ட காலத்தில் குறைவாகவே இருந்தது. | ADB கடன்களின் தவனைப் பணம் ரூபா 821 மில்லியனை 2019 நவம்பரில் செலுத்தியமையே இந்த நிலமைக்கான காரணமாகும். | வங்கி அதன் சொத்து அடிப்படையின் வளர்ச்சியில் கவணம் செலுத்த வேண்டும். |

**(v) வங்கியின் சந்தைப் பங்கு**

| | | |
|---|---|---|
| LSBS இன் மொத்த வைப்புக்களின் அடிப்படையில் வங்கியின் சந்தைப் பங்கு 0.038 சதவீதத்தில் 2015 இலிருந்து 2019 ஆண்டு காலப்பகுதியில் குறைவடைந்துள்ளது. மேலும் LSBS இன் மொத்த சொத்துக்களின் அடிப்படையில் வங்கியின் சந்தைப் பங்கு 0.28 சதவீத்தால் 2015 இருந்து 2019 ஆம் அண்டு காலப்பகுதியில் குறைவடைந்தது. | கருத்திற் கொண்டுள்ளோம் | வங்கியின் சந்தைப் பங்கு தொடர்பில் வங்கி கவனம் செலுத்த வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு ஆபத்து

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) வங்கியான மிகப் பெரிய அபாய பகுதிகள்**<br>2019 டிசெம்பர் 31 இல் வங்கியின் மொத்த கடன் கலவையில் ரூபா 1,226 மில்லியன் தொகை அல்லது 32.6 சதவீதம் மைக்ரோ பைனான்ஸ் கடன்களாகும் மற்றும் 2018 டிசெம்பர் 31 இல் அது ரூபா 1,319 மில்லியன் அல்லது 33.3 சதவீதமாகும்.<br><br>(i) மொத்த மைக்ரோ பைனான்ஸ் கடன் நிலுவைத் தொகையில் ரூபா 520 மில்லியன் அல்லது 42 சதவீதம் 2019 ஆம் ஆண்டிலும் மற்றும் ரூபா 568 மில்லியன் அல்லது 43 சதவீதம் 2018 ஆம் ஆண்டிலும் ஐந்து சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டது மற்றும் இது கனிசமான கூட்டு அபாயத்தை வங்கிக்கு உருவாக்கின்றது. மேலும் 2019 டிசெம்பர் 31 இல் போதுமான பாதுகாப்பு அளவின்மையும் இதற்கு ஒரு காரணமாகும். அத்துடன் இக் கடன் நிலுவையை அறவிடுவது கடினம். | கருத்திற் கொள்ளப்பட்டது. வங்கியால் பின்வரும் அபாய கட்டுப்பாட்டு காரணிகள் பின்பற்றப்படுகின்றது. SLS வங்கியானது இந்த PO அமைப்புக்களுக்கு பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கடன்களை வழங்கியிருந்தது.<br>• நிதி நிலை செயற்பாடு சமூக அடிப்படையான அமைப்பு<br>• எஸ்.எல்.எஸ் வங்கியுடனான கடந்த கால செயல் திறன் PO வின் கடன் நடவடிக்கைகள்<br>• PO இன் மொத்த கடன் கலவையில் ஒரு சதவீதமே SLSB யின் பெறப்பட்ட கடன்கள்<br>• கடன் கலவைக்கு எதிராக கடன் பாதுகாப்பு வைப்பு சதவீதம்.<br>• PO வின் NPL நிலை<br>• PO வின் CRIB அந்தஸ்து | மைக்ரோ பைனான்ஸ் கடன்களை வழங்கும் போது குறிப்பிட்ட சமூக அடிப்படையிலான அமைப்புக்களில் மட்டும் சார்ந்து இருக்காத வன்னம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேலும் 16 சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கடன் நிலுவை தொகையானது ரூபா 14 மில்லியனிலிருந்து ரூபா 50 மில்லியன் வரையாக 2019 இல் காணப்பட்டது. மற்றும் இத் தொகையானது மொத்த மைக்ரோ பைனான்ஸ் கடன் நிலுவையில் 37 சதவீதத்தை பிரதிபலிக்கின்றது. 10 மூடப்படாத சமூக அடிப்படையான அமைப்புக்களின் கடன் நிலுவைத் தொகை ரூபா 20 மில்லியன் முதல் ரூபா 50 மில்லியன் வரை காணப்பட்டது இது மொத்த மைக்ரோ பைனான்ஸ் கடனில் 28 சதவீதத்தை 2018 பிரதிபலிக்கின்றது. | கருத்திற் கொண்டோம் 2019 ஆம் ஆண்டின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 449.31 மில்லியனுக்கு எதிராக மேலும் 16 PO அமைப்புக்களுக்கான மொத்த பாதுகாப்பு வைப்புத் தொகை ரூபா 54.45 மில்லியன்.<br><br>எனவே மொத்த கடன் நிலுவையில் பணப் பாதுகாப்பு உறை 12.2 சதவீதமாகும். மீட்பு பகுதியினால் 3 PO க்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளன. அதன் நிலுவைத் தொகை ரூபா 102 மில்லியன் ஏனைய செயல்படும் 13 PO களின் நிலுவைத் தொகை ரூபா 347 மில்லியன் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை ரூபா 47.27 மில்லியனாக 2019 ஆம் ஆண்டில் காணப்பட்டது | மைக்ரோ பைனான்ஸ் கடன்களை வழங்கும் போது குறிப்பிட்ட சமூக அடிப்படையிலான அமைப்புக்களில் மட்டும் சார்ந்து இருக்காத வன்னம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ஆ) | வெளி நபர்களினால் வங்கிக்கு எதிராக மொத்தம் ரூபா 204,754,990 பெறுமதியான 18 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன் வங்கியினால் வெளி நபர்களுக்கெதிராக மொத்தம் ரூபா 2,054,613,941 பெறுமதியான 109 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ் வழக்குகளில்<br><br>(i) ரூபா 31,638,240 பெறுமதியான பதின்நான்கு வழக்குகள் நீதிமன்ற பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) ரூபா 158,886,057 பெறுமதியான பதினொரு வழக்குகள் தொடர்பான விபரம் ஆவண அறையில் இருக்கவில்லை. அல்லது பிரதிவாதி உரிய முகவரியில் இருக்கவில்லை. | கவனத்தில் கொண்டோம். | வங்கியானது வழக்குகளை தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 183 மற்றும் வங்கி 103 ஊழியர்களை மட்டுமே 2019 இல் பணியில் அமர்த்தியிருந்தது. அதற்கிணங்க 2019 டிசெம்பர் 31 இல் 80 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இலங்கை மத்திய வங்கியினால் ஆட்சேர்ப்பு தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காரணமாக, வங்கியால் ஒதுக்கப்பட்ட பணிநிலைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. இருப்பினும் தற்போது உள்ள பணியாளர்களை மதிப்பாய்வு செய்து மற்றும் பணியாளர்களின் தேவைப்பாட்டை அடையாளம் கண்டு வங்கியின் இயக்கத்தை சம நிலையாக கொண்டு செல்வதை உறுதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சரியான அனுமதியால் பெற்றுக் கொண்டதன் பின்னர் காலி இடங்களை பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவும் |